DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 219/2021** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 3 Witness for prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கலியபெருமாள் |
| Father's Name | : | திரு. சந்திரன் |
| Village | : | ராயர்பாளையம் |
| Taluk | : | தலைவாசல் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.09.2024.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல்விசாரணை**

துவக்க நேரம் 12.04

1) நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 03.09.2021 அன்று எனது ஊர்க்காரர் பரமசிவம் என்பவர் ராயர்பாளையத்தில் உள்ள முருகமலையிடம் வடக்கால் விபத்தில் அடிப்பட்டு, இறந்துவிட்டார். அந்த விவரம் எனக்கு தெரியும்.

2) கடந்த 05.09.2021 அன்று விபத்து நடந்த இடத்தை பார்ப்பதற்காக நானும் எனது நண்பர் ரஞ்சித் என்பவரும் சம்பவ இடத்திற்கு போனோம். அந்த விபத்து நடந்த இடத்திற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது போலீசார் வந்தார்கள். அடிப்பட்டது என்ன ஏது என்று விசாரித்தார்கள். மேப் போட்டார்கள். சாட்சி சொல்ல வருகிறாயா என்று கேட்டார்கள் நான் வருவதாக சொன்னேன். என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னுடன் ரஞ்ஜித்குமார் என்பவர் கையெழுத்து செய்தார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 05.09.2021 அன்று விசாரித்தார்கள். ரஞ்ஜித்குமாரையும் அன்றே விசாரித்தார்களா என்றால் ஆமாம். நாங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். கடந்த 05.09.2021 அன்று நானும் எனது நண்பர் ரஞ்ஜித்குமாரும் விபத்து நடந்த இடத்தை பார்ப்பதற்காக சென்றோம் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் போலீஸ் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், இன்றுதான் அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும், அடிப்பட்டது என்ன ஏது என்று கேட்டார்கள் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன். அதுபோல் நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், இன்றுதான் முதன்முதலாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) போலீஸ் விசாரணையில் விவசாயம் செய்து வருவதாக சொல்லவில்லை என்றாலும், டிரைவராக வேலை செய்துவருவதாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் விவசாயம்தான் செய்து வருகிறேன். ரஞ்ஜித்குமார் லத்துவாடி கிராமத்தை சேர்ந்தவர் என்றாலும், நான் ராயர் பாளைத்தில் குடியிருந்து வருகிறேன் என்றாலும் சரிதான். லத்துவாடிக்கும், ராயர்பாளையத்திற்கும் இடையே 15 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இல்லை. 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

4) ரஞ்ஜித்குமார் டிரைவராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். படம் போட்டதுயார், யார் எழுதியது அவர் பெயர் என்னவென்று எனக்கு தெரியாது என்றால் ராஜசேகர் சார் வந்ததார். உடன் ஒரு போலீஸ் வந்தார் அவர்தான் தயார் செய்தார். பார்வை மகஜரில் என்ன சங்கதி எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். எவ்வாறு எனக்கு தெரியும். என்னை கேட்டுதான் படம் தயார் செய்தார்கள், பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரிதான்.

5) நான் சொல்ல, சொல்ல பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றாலும், பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் முருகன் கோவில் அடிவாரம் என்றால் ஆமாம். வடபுறத்தில் கிழக்கு திசையில். அடிவாரத்தில் இருந்து விபத்தில் இறந்த பரமசிவம் என்பவரின் மகள் செல்வி வீடு 1 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் அவ்வளவு இருக்காது 100 மீட்டர் இருக்கும்.

6) பரமசிவம் மகன் கண்ணுசாமி வீடு எந்த இடத்தில் உள்ளது என்றால் முருகன் கோவில் எதிரில் உள்ளது. மாதிரி வரைபடத்தில், கண்ணுசாமி வீட்டை குறிப்பிட்டு

வரைந்தார்களா என்றால் இல்லை. வரைபடத்தில், முருகன் கோவில் அடிவாரத்தை காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் முருகன் கோவில் அடிவாரத்தை காண்பிக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

7) செல்வம் என்பவரின் வீடு முருகன் கோவில் அடிவாரத்தில் உள்ளதா என்றால் சாலையின் தென்புறம் உள்ளது. செல்வி வீட்டிற்கு கிழக்காக வீடுகள் இல்லை என்றால் சரியல்ல. செல்வம் வீடு உள்ளது. ராமர் வீடிற்கு கிழக்கால் செல்வம் என்பவரது வீடு இல்லை என்றாலும் வழக்கிறக்காக வீடு இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

8) நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வீரகனூர் போலீசார் எந்த மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடத்திற்காக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

9) விபத்தில் இறந்த பரமசிவம் என்பவரின் உறவினர் என்பதால் என்னையும், ரஞ்ஜித்குமார் என்பவரை போலீசார் காவல் நிலையம் வரவழைத்து கையெழுத்து பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதுபோல் எந்த விபத்தும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

10) நானும், ரஞ்ஜித்குமார் என்பவரும் டிரைவர் என்பதால் அடிக்கடி காவல் நிலையம் செல்லும் பழக்கம் உள்ளது என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்துவிட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை -** இல்லை

முடிவு நேரம் 12.25

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.